DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
PROSECUTION WITNESS

SC. No. 71/2023 Crime No. Station Thally PS

| | | | |
|---|---|---|---|
| Name | Lw13 /Pw 4 / Ramajayam VAO | Village | |
| Father Name | Nagarajan | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**06.01.2025.**

**எதிரிகள் ஆஜர் .**

**முதல் விசாரணை**

சத்தியமாக சொல்கிறேன்.

நான் தற்போது தாவரக்கரை கிராமத்தில் VAO ஆக பணியாற்றி வருகிறேன்.

கடந்த 30.08.2020 ம் தேதி நான் செட்டிப்பள்ளி கிராம Vao ஆக பணியாற்றிய போது அகலக்கோட்டை இன்சார்ஜ் விஏஓ ஆக பணியில் இருந்தேன்.

அப்போது காலை சுமார் 5.30 மணியளிவல் தளி காவல்நிலையத்தில் இருந்து யாரே ஒரு காவலர் எனக்கு அலைபேசியில் கூப்பிட்டு பாலதொட்டணப்பள்ளி பஸ்டாப் அருகே ஒரு ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக அழைத்தார்.

நான் காலை 6.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றேன்.

இன்று ஆஜராகியுள்ள முதல் எதிரி முருகேஷ் பஸ்டாப் முன்பு நின்று கொண்டிருந்தார்.

அந்த இடத்தில் SI இருந்தார்.

என் முன்னிலையில் ஆஜர் முதல் எதிரியை SI சந்தேகப்பட்டு விசாரித்தார்.

அப்போது ஆஜர் முதல் எதிரி தான் இருதுக்கோட்டை பஞ்சாயத்தில் குடியிருந்துவருவதாகவும் தன்து மனைவிக்கு குழந்தை பிறந்துள்ளதால் தனது மாமனார் வீட்டிற்கு தன்து மனைவி சென்றுவிட்டதால் நானும் தற்போது மாமனார் வீட்டில் தான் வசிப்பதாவும்,

தான் அங்கு வசிப்பதால் தானும் தானது மாமனார் வீட்டிற்கு அருகில் வசிக்கும் ருத்திரப்பாவும் சேர்ந்து தங்களுக்கு காட்டு பன்றி வேட்டையாடும் பழக்ககம் உள்ளதால் அதை வேட்டையாட சுமார் 2 நாட்கள் முன்பு முதுகேரிதொட்டி காட்டுக்குள் சென்றதாகவும்,

அந்த காட்டிற்கு மாலை சுமார் 4 மணி அளவில் சென்றதாகவும் அப்போது பன்றி வருவதாக நைித்து தான் கூட கூட்டி சென்ற ருததிரப்பாவை தவறுதலாக சுட்டுவிட்டதாகவும் அதற்கு பின்னிட்டு ருத்திரப்பாவின் அலறல் சத்தம் கேட்டு அருகில் சென்று பார்த்த போதுதான் தான் ருததிரப்பாவை சுட்டதை தான் தெரிந்து கொண்டதாகவும்,

ருத்திரப்பாவுக்கு வயிற்றில் வலது பக்கம் குண்டு பாய்ந்து ரத்ததம் வந்ததாகவும் தான் பயந்து போய் தானும் சுட்டுகொள்கிறேன் என்று ருத்திரப்பாவிடம் சென்னபோது பயப்படவேண்டாம் யாரேனும் கேட்டால் நான் மரத்தில் இருந்து கீழே விழுந்துவிட்டதாக கூறிவிடுகிறேன் என்று சொன்னதாகவும்.

இந்த சத்ததத்தை கேட்டு சம்பவ இடத்திற்கு வன அலுவலர்கள் உடனடியாக வந்ததாகவும் அவர்கள் தங்களை விசாரித்தபோது இந்த குற்றத்தில் இருந்து தப்பிக்க

வேண்டி அவர்களிடம் யாரே அடையாளம் தெரியாத நபர் வந்து ருத்திரப்பாவை சுட்டதாக தாங்கள் இருவரும் கூறிவிட்டதாகவும்,
தாங்கள் இருந்த வனப்பகுதியில் அருகாமையில் தான் தாங்கள் வசிக்கும் ஊர் உள்ளதால் தங்கள் உறவினர்களுக்கு அந்த வழியில் போகும் நபர்களிடம் கூறி ருத்திரப்பாவை மருத்துவமனையில் அனுமதித்தாக கூறினார்.
மேலும் அவர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் ருத்திரப்பாவை சுட்ட துப்பாக்கியை அந்த காட்டில் ஒரு பாறைக்கு பின் மறைத்து வைத்திருப்பதாக கூறினார்.
அவர் தன்னை கூட்டி சென்றால் எடுத்து தருவதாக என் முன்னிலையில் போலீசாரிடம் கூறினார்.
இன்று ஆஜாகியுள்ள முருகேஷ் போலீசையும் என்னையும் முதுகேரி தொட்டி காட்டு பகுதிக்கு அழைத்து சென்று 2 நட்டு துப்பாக்கி மறைத்து வைத்ததை போலீசாரிடம் எடுத்துக் கொடுத்தார்.
மேலும் அதே இடத்தில் கருப்பு கலர் துணிப்பை அந்த பைக்குள் பால்ரஸ் குண்டுகள் மற்றும் கரி மருந்து இரந்ததை எடுதது கொடுத்தார்.
அந்த துப்பாக்கி ஒளித்து வைத்த இடத்திலேயே சுமார் 1 அடிக்கு மேல் நீளமுள்ள ஒரு கம்பி அதாவது சுமார் 130 செ்.மீ நீளமுள்ள கம்பி எடுத்து போலீசாரிடம் கொடுத்தார்.
மேலும் முதல் எதிரி முருகேசன் என்னை அவர்கள் மாமனார் வீட்டிற்கு கூட்டி சென்று ருத்திரப்பா சம்பவத்தன்று அணிந்திருந்த பேண்ட் மற்றும் சட்டையை ஒரு புதரில் மறைத்து வைத்திருந்ததை எடுத்து கொடுத்தார்.
அதை போலீசார் என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள்.
அது புளு கலர் ஜீன்ஸ் பேண்ட், சட்டை சிவப்பு கலர் ஆகும். அந்த சட்டையில் ரைட் சைட் Holes இருந்தது.
மேலே சொன்ன பொருட்களை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் அதை தட்டச்சு செய்த பிறகு நான் காவல் நிலையத்தில் வைத்து கையெபப்பம் செய்தேன்.
சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றுததல் மகஜரில் போலீசர் கையால் முதலில் எழுதி கொண்டார்கள் அதை தான் காவல் நிலையத்தில் வைத்து தட்டச்சு செய்து தன்னிடம் கையெழுத்து பெற்றுகொண்டார்கள் என்று சாட்சியம் அளித்தார்.
இந்த சாட்சி மூலமாக ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து **அ.த.சா.ஆ. 4 ஆகவும்,**
சுமார் 145 செ.மீ உயரம் கொண்ட நாட்டு துப்பாக்கி யான SPML பேரல் மற்றும் 108 செ.மீ. நீளமுள்ள வெடி மருந்து துருத்தும் கம்பி , இரும்பு ரிங் –3, பித்தளை ரிங்–3, வேட்டைக்கு பயன் படுத்தும் கரி மருந்து சுமார் 400 கிராம், 100 கிராம் உள்ள குண்டுகள், இரும்பு ஈயம் சுமார் 100 கிராம், சிறிய கத்தி ஒன்று சுமார் 21 செ.மீ., ஒரு கருப்பு கலர் துணிப்பபை ஒன்று, சுமார் 155 செ.மீ. உயரம் கொண்ட பழுப்பு நிறத்தில் மரத்தினால் செய்யப்பட்ட ருத்திரப்பா என்பவர் வைத்திருந்த நாட்டுத்துப்பாக்கி ஒன்று, வெடி மருந்து குத்தும் 107.5 செ.மீ உள்ள இரும்பு கம்பி, மற்றும் கருப்பு நிற பைத்துணியில் வைத்துள்ள சுமார் 100 கிராம் கரிமருந்து, குண்டுகள் சுமார் 100 கிராம், ஆகியவை கைப்பற்றிய கைப்பபற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து **அ.த.சா.ஆ. 5 ஆகவும்,**
இரத்தகறை படிந்த ரெட் கலர் முருகேசன் சட்டை ஒன்று, இரத்தகறை படிந்த ஜீன்ஸ் பேண்ட் புளு கலர் ஒன்று, கைப்பற்றறிய கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து **அ.த.சா.ஆ. 6** ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சொன்னபடி எதிரி என் முன்னிலையில் எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்று சொன்னாலும் அது தொடர்ச்சியாக எந்த பொருளும் போலீசாரால் எதிரி உங்கள் முன் எடுத்து கொடுத்து அதை போலீசார் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றவில்லை என்று சொன்னாலும் நீங்கள் அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தீர்கள் என்று சொன்னாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணைமுடிக்கப்பட்டது.**

ஒம்./–திரு.ஆர்.ஹரிஹரன்.,எம்.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
PROSECUTION WITNESS

SC. No. 71/2023 Crime No. Station Thally PS

| Name | Lw1 /Pw 3 / Malesh | Village | |
|---|---|---|---|
| Father Name | Mallappa | Taluk | |
| Age | 45 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**06.01.2025.**

**எதிரிகள் ஆஜர் .**

**முதல் விசாரணை**

சத்தியமாக சொல்கிறேன்.

நான் தற்போது முத்தேப்பள்ளியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன்.

ஆஜர் எதிரிகளை நன்றாக தெரியும்.

ஆஜர் எதிரி 1 முருகேன் எனது அண்ணன் மகன் ஆவார். A2 ருத்திரப்பா எனது தம்பி ஆவார்.

கடந்த சுமார் 5 மற்றும் 6 வருடங்களுக்கு முன்பு எனக்கு வருடம் தேதி ஞுபாகம் இல்லை.

மைாலை 5 மணிக்கு எனக்கு போன் செய்து எனது தம்பியான ருத்திரப்பாவுக்கு அடிப்பட்டதாக கூறி என்னை குருகப்பாவை காட்டிற்கு அழைத்தார்கள்.

நான் மற்றும் மாதேஷ் 2 பேரும் சுமார் 1 ½ மணி நேரத்தில் அதாவாது சுமார் 6.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றோம்.

நாங்கள் செல்லுவதற்குள் ஆஜர் 2 எதிரிகளை நாங்கள் செல்லும் தடத்தில் வந்துகொண்டிருந்தார்கள் நாங்கள் சென்று பார்தபோது எனது தம்பி ருத்திரப்பா வயிற்று பகுதியில் நாட்டு துப்பாக்கி குண்டு பாய்ந்து அடிப்பட்டிருந்தது.

நான் முதலில் கேட்டபோது தான் மரத்தில் இருந்து கீழே விழுந்துவிட்டதாக கூறினார்.

பிறகு மருத்துவமையில் மருத்துவர்கள் விசாரித்தபோது தான் தன்னை யாரோ துப்பாக்கியால் சுட்டதாக கூறினார்.

நாங்கள் தான் தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் சென்று 2ம் எதிரி ருத்திரப்பவை சேர்த்தோம்.

போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கூறுகிறேன் 2 ம் எதிரி ருத்திரப்பா உங்கள் முன்னிலையில் மருத்ததுவரிடம் யாரோ தன்னை துப்பாக்கியால் சுட்டதாக கூறவில்லை அது மருத்துவரே 2ம் எதிரி சொன்னதாக எழுதி கொண்டார் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

ஓம்./−திரு.ஆர்.ஹரிஹரன்.,எம்.எல்.,

சார்பு நீதிபதி,

தேன்கனிக்கோட்டை.